**21/12/2022**

**OS. No. 3/2018**

**வா.சா.1 இலட்சுமணன்**

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கிற்கான விவரங்களை நான் தான் வழக்றிஞரிடம் சொன்னேன். இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எப்போது 2 ம் பிரதிவாதி கடக்கால் எடுக்க முற்பட்டாற் என்னாற் 2018 ஆம் ஆண்டு. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 1 ம் பிரதிவாதி கடக்கால் எடுக்க முயற்சிக்கவில்லை. 2 ம் பிரதிவாதிக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. 2 ம் பிரதிவாதி அவருக்கு சொந்தமான இடத்தில் தொகுப்பு வீடுதான் கட்டியுள்ளார் என்றால் சரிதான். வீடுகட்டும் போது 2 ம் பிரதிவாதி அளந்தார் என்றால் சரிதான். நான் அதே 2018 ம் ஆண்டு என்னுடைய சொத்தினை சர்வேயர் மூலம் அளந்தேன்.

சர்வேக்கு பணம் கட்டியதற்கான செல்லானை தாக்கல் செய்யவில்லை. நான் அளக்கவில்லை என்பதால் தான் செல்லானை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான சர்வே கல்லை பிடுங்குவது குற்றம் என்றால் சரிதான். நான் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் சர்வே கல்லை பிடுங்கியது சம்மந்தமாக எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை. சர்வே கல் இல்லை என்றாலும் அதை யாரும் பிடுங்கவில்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்ற உத்தரவின் படி சர்வேயர் அளவிடு செய்யும் போது சர்வே கல்லை கொண்டு அளவிடு செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.9 ஆவணம் தாவா சொத்திற்கு சம்மந்தம்மில்லாது என்றால் சரிதான். வழக்கு போடுவதற்கு முன்பு 1,2 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் அதனை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6. ஆவணத்திற்கான ஒப்புகை சீட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வட்டார வளர்ச்சி

அலுவலருக்கு வா.சா.ஆ.6 மனுவை அனுப்பவில்லை என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகளுக்கு மனு கொடுக்கவில்லை. என்னுடைய மனைவியும், மகனும் சேர்ந்து 2ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி, மகனை தாக்கியது சம்மந்தமாக இந்த நீதிமன்றத்தில் குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

என்னுடைய வீட்டிற்கு மேற்கு பக்கம் தான் எனுக்கு இடம் உள்ளது என்றாலும், கிழக்கு பக்கம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. 1 ம் பிரதிவாதியை இந்த வழக்கில் தேவையில்லாமல் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவருக்கு சொந்தமான இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றாலும் என்னுடைய இடத்தில் இம்மி அளவும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

**3 முதல் 5 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சர்வே எண் 384/23 க்கு வழக்கு போட்டுள்ளேனா என்றால் 384/21, 384/22, 384/23 வழக்கு போட்டுள்ளேன். 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் 2 ம் பிரதிவாதிக்கு பாத்தியபட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து அளவிடு செய்து வீடு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கேட்கும் பரிகாரம் கிடைக்தக்கது என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.